**செ. கு. எண்: 010** **நாள் : 03.02.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களின்
அறிக்கை – 3.2.2015

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு போரின் காரணமாக புகலிடம் தேடி தமிழகம் வந்து பல ஆண்டுகளாக தமிழ்நாட்டில் வாழ்ந்து வரும் இலங்கை தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புவது பற்றி விவாதிப்பதற்காக கடந்த 30.1.2015 அன்று தமிழக அரசின் உயரதிகாரியை அனுப்பி வைக்கும்படி தமிழக அரசுக்கு மத்திய அரசு அனுப்பிய கடிதத்திற்கு நான் பாரதப் பிரதமருக்கு 28.1.2015 அன்று ஒரு கடிதம் அனுப்பி இருந்தேன். மத்திய அரசு அனுப்பியிருந்த கடிதத்தில் இலங்கை தமிழ் அகதிகளின் விருப்பத்தின் அடிப்படையில் இலங்கைக்கு திருப்பி அனுப்புவது குறித்து விவாதிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இலங்கையிலிருந்து அகதிகளாக தமிழகத்திற்கு வந்த 3,04,269 பேரில் 2,12,000 பேர் அவர்களுடைய சொந்த விருப்பத்தின் பேரில் ஏற்கனவே திரும்பியுள்ளனர் என்பதை நான் அந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டி, எனவே சொந்த விருப்பத்தின் பேரில் இலங்கை திரும்புவோர் குறித்த கூட்டம் என்பது இலங்கை தமிழ் அகதிகளை இலங்கைக்கு திரும்பிச் செல்ல ஊக்குவிக்கும் நடவடிக்கை தொடர்பான கூட்டம் என்றே பொருள் கொள்ளப்படும் என்பதை சுட்டிக்காட்டி, அகதிகள் இலங்கைக்கு திரும்புவதற்கு சுமூகமான நிலை இலங்கை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இன்னமும் ஏற்படவில்லை என்பதை தெரிவித்திருந்தேன்.

மேலும், அண்மையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துவதாகவும், நல்லிணக்கம் உருவாகும் என்ற எதிர்பார்ப்பை இது ஏற்படுத்தியுள்ளபோதிலும், தமிழர் பகுதிகளில் இலங்கை ராணுவம் நீடித்து வருவது தமிழர்களிடையே தொடர்ந்து அச்சத்தை ஏற்படுத்துவதாக உள்ளது; அச்சுறுத்தல், அடக்குமுறை, மனித உரிமை மீறல்களுக்கான சூழ்நிலை முற்றிலுமாக நீங்கிவிடவில்லை; உள்நாட்டில் இடம்பெயர்ந்த தமிழர்கள் இன்னமும் தொடர்ந்து முகாம்களிலேயே வாழ்ந்து வருகிறார்கள்; நல்லிணக்கம் மற்றும் மறுகுடியமர்த்தல் ஆகியவை குறித்த புதிய அரசின் எண்ணங்கள் இன்னமும் செயலாக்கப்படவில்லை; இலங்கையில் நல்லிணக்கமும், மறு குடியமர்த்தலும் செயல்படுத்தப்பட்டால் தான், பிற நாடுகளில் குடியேறியுள்ள இலங்கை தமிழர்கள் மீண்டும் தாயகம் திரும்புவதற்கான நம்பிக்கையை உருவாக்கும்; இலங்கை அரசால் உறுதியான நம்பத்தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழ் அகதிகளுக்கு நிருபிக்கப்படக்கூடிய உறுதிமொழிகள் வழங்கப்பட்டு சொந்த இடங்களுக்கு திரும்பக்கூடிய நம்பிக்கை உருவாக்கப்பட்ட பின்னரே, இத்தகைய ஒரு கூட்டம் நடத்தப்படவேண்டும் என்று நான் பாரத பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருந்தேன்.

இந்தக் கூட்டத்தின் நோக்கம் பற்றியும், பாரதப் பிரதமருக்கு நான் எழுதிய கடிதம் பற்றியும் சரியாக புரிந்து கொள்ள இயலாத தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி “அகதிகள் பிரச்சனையில் அ.தி.மு.க அரசின் பொறுப்பற்ற செயல்!” என்ற தலைப்பில் ஒரு வெற்று அறிக்கையை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கை பல்வேறு முரண்பாடுகள் நிறைந்துள்ளதாக உள்ளது.

அறிக்கையின் தொடக்கத்திலேயே என்னை மற்றவர்கள் எவ்வாறு மதித்து வருகிறார்கள் என்று சம்பந்தமே இல்லாமல் ஒரு கருத்தை தெரிவித்துள்ளார்

திரு.கருணாநிதி. இது "காமாலைக் கண்ணுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்'' என்ற பழமொழியைத் தான் நினைவுபடுத்துகிறது. தற்போது தி.மு.க.தலைவர் திரு.கருணாநிதிக்கு அவரது கட்சிக்குள்ளேயே என்ன மதிப்பும், மரியாதையும் உள்ளது என்பதை தமிழகமே நன்கு அறியும். இதனால், மன உளைச்சலுக்குள்ளாகியுள்ள திரு.கருணாநிதி, மற்றவர்கள் மதிக்கப்படவில்லை என்று கூறிக் கொண்டு தனக்குத் தானே ஆறுதல் தேடிக்கொள்கிறார். மதிப்பு, மரியாதை என்பதெற்கெல்லாம் தி.மு.க.வினரும், அதிலும் குறிப்பாக தி.மு.க. தலைவரும், அவரது தனயனும் தனி அகராதியையே வைத்துள்ளனர். அதனால் தான் சமீபத்தில் திரு.மு.க.ஸ்டாலின் "கவுன்சிலர் கூட பந்தாவோடு வருவார். ஆனால் ஒரு முதல்வர் வருவதும் தெரியாமல், போவதும் தெரியாமல் …. வந்து செல்கிறார்" என்று சொல்லியுள்ளார்.தந்தைக்கும் தனயனுக்கும் பந்தாவாக வலம் வருவது தான் மரியாதை போலும்! அவரவர்க்கு உரிய மரியாதை அவரவர்க்கு கிடைக்கப் பெறும் என்பதை தந்தையும் தனயனும் புரிந்து கொள்ள வேண்டும்.

தனது அறிக்கையில் என்ன சொல்ல வருகிறோம் என்பது திரு.கருணாநிதிக்கு புரியாததால் அவர் தன்னையும் குழப்பிக் கொண்டு, பிறரையும் குழப்ப முற்பட்டுள்ளார் என்பது அவரது அறிக்கையிலிருந்து தெள்ளத் தெளிவாக தெரிகிறது. "இலங்கை அகதிகளும், இலங்கையிலே முன்னாள் அதிபர் ராஜபக்சே அரசின் கொடுமையினால் புலம் பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களும், தாங்கள் மீண்டும் தாயகம் திரும்பி, நிம்மதியாக வாழ வேண்டும் என்று விரும்புவது ஒரு புறம் இருந்தாலும், தற்போது அப்படி அங்கே சென்றால் அமைதியான வாழ்வுக்கான வழி ஏற்படுமா? அல்லது முன்பு போலவே கொடுமை தொடருமா? என்றே தெரியாத நிலையில்; இலங்கைக்கு திரும்பினால் என்ன நடக்கும்? என்பது தெளிவற்ற தெரியாத நிலையில்……" மத்திய அரசு இந்தக் கூட்டத்தை கூட்டியுள்ளதாக தெரிவித்துள்ளார். அதாவது, நல்லிணக்கம் மற்றும் மறு குடியமர்த்தல் ஆகியவை குறித்த புதிய அரசின் எண்ணங்கள் இன்னமும் செயலாக்கப்படவில்லை; இலங்கையில் நல்லிணக்கமும், மறு குடியமர்த்தலும் செயல்படுத்தப்பட்டால் தான், பிற நாடுகளில் குடியேறியுள்ள இலங்கை தமிழர்கள் மீண்டும் தாயகம் திரும்புவதற்கான நம்பிக்கையை உருவாக்கும்; இலங்கை அரசால் உறுதியான நம்பத்தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழ் அகதிகளுக்கு நிருபிக்கப்படக்கூடிய உறுதிமொழிகள் வழங்கப்பட்டு சொந்த இடங்களுக்கு திரும்பக்கூடிய நம்பிக்கை உருவாக்கப்பட்ட பின்னரே, இத்தகைய ஒரு கூட்டம் நடத்தப்படவேண்டும் என்று நான் பாரத பிரதமருக்கு கடிதம் எழுதி, அதன் அடிப்படையில் அந்தக் கூட்டத்தில் தமிழக அரசின் சார்பில் எவரும் கலந்து கொள்ளாதது சரியான நிலைப்பாடு தான் என்பதை திரு.கருணாநிதி ஒத்துக் கொண்டுள்ளார் என்பது தான் இதன் பொருள். ஆனால், அங்கு தற்போது உள்ள சூழ்நிலையில் இலங்கை அகதிகள் அங்கே சென்றால் அமைதியான வாழ்வுக்கான வழி ஏற்படுமா **?** என்று தெரியாத நிலையே உள்ளது என்று தெரிவித்துவிட்டு, ஆனாலும், மத்திய அரசு கூட்டிய அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாதது அதிமுக அரசின் பொறுப்பற்ற செயல் என்று கூறுவது எத்தகைய இரட்டை வேடம்.

இலங்கையிலிருந்து அகதிகளாக தமிழகத்திற்கு வந்த 3,04,269 பேரில், 2,12,000 பேர் அவர்களுடைய சொந்த விருப்பத்தின் பேரில் ஏற்கனவே இலங்கைக்கு திரும்பியுள்ளனர். எனவே, தற்போது தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் சொந்த விருப்பத்தின் பேரில் இலங்கை திரும்புவதற்காக ஒரு கூட்டம் நடத்தப்படுகிறது என்றால், அது எதற்கான கூட்டம் என்பது எவருக்கும் தெரியும். திரு.கருணாநிதிக்கும் அது புரியும். ஆனாலும், இலங்கை தமிழர்பால் தனக்குள்ள காழ்ப்புணர்ச்சி இன்னமும் தணியாத நிலையில் இங்கே உள்ள இலங்கை அகதிகளை உடனடியாக இலங்கைக்கு திருப்பி அனுப்பிவிட வேண்டும் என்று துடிக்கிறார் திரு.கருணாநிதி.

இலங்கை தமிழர் பல்லாயிரக்கணக்கானோர் 2009 ஆம் ஆண்டு கொன்று குவிக்கப்பட காரணமாக இருந்து, இலங்கையில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு துரோகம் விளைவித்த திரு.கருணாநிதி தற்போது இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை தமிழ் அகதிகளுக்கும் துரோகம் இழைக்க முற்பட்டுள்ளார்.

இலங்கையில் தமிழினத்தையே அழித்த சிங்கள வெறிபிடித்த முந்தைய இலங்கை அரசுக்கு அனைத்து விதமான உதவிகளையும் செய்தது தி.மு.க.அங்கம் வகித்த மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு தான். இலங்கை ராணுவத்தினருக்கு, இந்திய மண்ணில், இந்திய ராணுவம் ரகசியமாக போர் பயிற்சி அளித்தது, இலங்கை ராணுவத்திற்கு இந்திய அரசு ஆயுதங்களை வழங்கியது, மிக நவீன ராணுவ ரேடார் கருவிகளை வழங்கியது, இந்திய ராணுவத்தின் மூத்த அதிகாரிகள் மற்றும் இந்திய அரசின் உயரதிகாரிகள் இலங்கைக்கு அடிக்கடி சென்றது என பல செய்திகள் அப்போது ஊடகங்களில் வெளிவந்தன. அத்தகைய தமிழின விரோத செயல்களுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அப்போதே கடும் கண்டனத்தை தெரிவித்தார்கள். ஆனால், மாநிலத்திலும், மத்தியிலும் ஆட்சி அதிகாரத்தில் இருந்த தி.மு.க.வின் தலைவர் திரு.கருணாநிதி, அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டி ‘இரண்டு வாரத்தில் போர் நிறுத்தத்திற்கு மத்திய அரசு முன்வராவிட்டால் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா’ என்ற அளவில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி ஒரு நாடகத்தை அரங்கேற்றினார். பின்னர், மத்திய அரசின் நடவடிக்கை திருப்தி அளிப்பதாக இருக்கிறது என்று தெரிவித்து நாடகத்தை முடித்துக் கொண்டார். ‘அனைத்துக் கட்சிக் கூட்டம்’ , ‘சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டம்’, ‘தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானம்’, ‘மனிதச் சங்கிலிப் போராட்டம்,’ ‘நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவி விலகல் கடிதங்களை திரு.கருணாநிதியிடம் அளித்தல்’, பிரதமருக்கு தந்தி அனுப்புங்கள் என்ற அறிவிப்பு, டில்லியில் பிரதமருடன் சந்திப்பு, வேலை நிறுத்தம், பேரணி, என பல்வேறு கண்துடைப்பு நாடகங்களை நடத்திவிட்டு, இறுதியாக மூன்று மணி நேர உண்ணாவிரத நாடகத்தை நடத்தினார் திரு.கருணாநிதி. அதன் பின்னர், லட்சக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் எவ்வித வசதியுமின்றி, முகாம்களில் தங்க வைக்கப்பட்டு, அப்போதைய இலங்கை அரசால் கொடுமைப்படுத்தப்பட்ட போதும் திரு.கருணாநிதி தன் மகள் கனிமொழி உட்பட தி.மு.க. மற்றும் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களை இலங்கைக்கு அனுப்பி, இலங்கை தமிழர்கள் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்த இலங்கை அதிபரை சந்திக்க வைத்து, கைகுலுக்கி, விருந்து உண்டு, பரிசுப் பொருட்களை பெற்றுக் கொள்ளச் செய்தார். பின்னர், பத்திரிகையாளர்களிடம் “முகாம்களில் தமிழர்கள் யாரும் சித்ரவதை செய்யப்படவில்லை” என்று பேட்டி அளித்து மற்றுமொரு நாடகத்தை அரங்கேற்றினார். இலங்கை தமிழர்களுக்கு எதிராக இவ்வளவையும் செய்த திரு.கருணாநிதி, தற்போது தமிழகத்தில் வாழும் இலங்கை அகதிகளின் நன்மைக்கு எதிராக அறிக்கை வெளியிட்டிருப்பது கண்டிக்கத்தக்கது.

இலங்கையில் அமைந்துள்ள புதிய அரசின் நல்லிணக்கம் மற்றும் மறுகுடியமர்த்தல் ஆகிய நல்லெண்ணங்கள் செயலாக்கப்பட்டதற்குப் பின்னரே, தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவதற்கான கூட்டம் நடத்தப்படவேண்டும் என்ற இந்த அரசின் முடிவு எப்படி பொறுப்பற்ற செயல் ஆக இருக்க முடியும்? இங்கே உள்ள இலங்கை அகதிகளின் மீது இந்த அரசுக்கு உள்ள பொறுப்பின் காரணமாகத் தான் இது போன்ற ஒரு சரியான முடிவு எடுக்கப்பட்டது என்பதை நடுநிலையாளர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வர்.

இலங்கை தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த மட்டக்களப்பு எம்.பி. திரு. சீனித்தம்பி யோகேஸ்வரன், சில நாட்களுக்கு முன்பு தமிழகம் வந்திருந்த போது, வாரம் இரு முறை வெளிவரும், ஒரு பத்திரிக்கைக்கு பேட்டி அளித்துள்ளார். அதில் "இது வரை கிழக்கு மாகாணம் உள்பட பல இடங்களில் மக்கள் வாழ முடியாத சூழ்நிலை இருந்தது. பல இடங்களில் மக்கள் குடியமர்த்தப்படாமல் இருந்தனர். இந்த நிலைமைகளையெல்லாம் மாற்றியமைக்க தற்போதைய அரசாங்கம் முடிவெடுக்கிறது. ஆரம்ப கட்டமாக தமிழர்கள் குடியேற்றப்பட்டு வருகிறார்கள். விரைவாக குடியேற்றம் நடைபெற உள்ளது. அதன் பிறகு தமிழ்நாட்டிற்கு இடம் பெயர்ந்த மக்களை அழைத்து குடியமர்த்த உள்ளோம்" என்று கூறியுள்ளார்.

இதைத் தான் மத்திய அரசுக்கு நாங்களும் சொல்லி இருந்தோம். இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்கள் முதலில் தங்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அதன் பின்னரே, இங்கே உள்ள இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவதற்கான கூட்டம் நடத்தப்படவேண்டும் என்பது தான் எங்களது நிலைப்பாடு.

திரு.கருணாநிதி தனது நீண்ட அறிக்கையில், தி.மு.க. ஆட்சியில் இலங்கை தமிழர்களுக்கு என்னென்ன செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துள்ளார். அதிலே சொல்லியுள்ள பல சலுகைகள் மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டவை என்பது தான் உண்மை. ஆனால் தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் அனைத்துச் சலுகைகளையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலங்கை அகதிகளுக்கும் விரிவுபடுத்தி வழங்கிய காரணத்தால், 2013-14 ஆம் ஆண்டில் இலங்கை அகதிகளுக்கென மத்திய அரசு 37.30 கோடி ரூபாய் மட்டுமே வழங்கியுள்ள நிலையில் மாநில அரசால் செலவிடப்பட்ட தொகை 111 கோடி ரூபாய் ஆகும்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழ் அகதிகளுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்னென்ன சலுகைகள் வழங்கியுள்ளார்கள் என்று நான் சுட்டிக்காட்டியதை பொறுத்துக் கொள்ள முடியாத திரு.கருணாநிதி தனது ஆட்சியில் என்னென்ன வழங்கப்பட்டது என்று பட்டியலிட்டதில், பல பணிகள் தமிழக அரசால் செய்யப்படாத ஒன்றாகும்.

திருநெல்வேலி மாவட்டம், கங்கை கொண்டான் முகாமில் 96 வீடுகளும், சென்னலகுடியில் 90 வீடுகளும், குடியாத்தம் முகாமில் 62 வீடுகளும், காங்கேயத்தில் 63 வீடுகளும், பாவூர்சத்திரத்தில் 26 வீடுகளும், கோவை மாவட்டம், வேடர் காலனியில் 150 வீடுகளும், திருமூர்த்தி நகர் முகாமில் 115 வீடுகளும், வேலூர் மாவட்டம், சின்னப்பள்ளிக்குப்பம் முகாமில் 87 வீடுகளும், திருநெல்வேலி மாவட்டம், நாரணம்மாள்புரத்தில் 9 வீடுகளும், ஆலடியூர் முகாமில் 46 வீடுகளும், அத்தியடிப்பிள்ளையார் கோவில் முகாமில் 60 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டதாக பெருமை பாராட்டியுள்ளார் திரு.கருணாநிதி. இந்த வீடுகள் அனைத்தும் CRS மற்றும் ADRA ஆகிய தொண்டு நிறுவனங்களால் கட்டப்பட்டதாகும். திரு.கருணாநிதி தலைமையிலான முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு இந்த வீடுகளுக்காக ஒரு ரூபாய் கூட வழங்கவில்லை என்பது தான் உண்மை. தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் அவர்களது சொந்த செலவில் கட்டப்பட்ட வீடுகளுக்கு திரு.கருணாநிதி எப்படி சொந்தம் கொண்டாடுகிறார் என்பது தெரியவில்லை. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலான அ.இ.அ.தி.மு.க. அரசு 1,655 வீடுகளை கட்டுவதற்கு 19.86 கோடி ரூபாய் மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துள்ளது.

அது போலவே, அகதிகள் முகாம்களில் அடிப்படை வசதிகள் செய்திட 25 கோடி ரூபாய் மாநில நிதியிலிருந்தே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதே போன்று, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 2009-2010 ஆம் ஆண்டில் 5 கோடி ரூபாய் செலவில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டு, நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு, இறுதி திருத்திய நிதி ஒதுக்கீட்டில் அது திரும்பப் பெறப்பட்டு விட்டது என்பது தான் உண்மை. அதே போன்று முகாம்களில் செய்யப்பட்ட அடிப்படை வசதிகள் மற்றும் பழுதுபார்க்கும் பணிகள் மத்திய அரசின் செலவிலேயே செய்யப்பட்டவையாகும். அது போலவே, உயர்த்தப்பட்ட பணக்கொடையும் மத்திய அரசால் வழங்கப்பட்டது தான். தற்போது புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உயர்த்தப்பட்டுள்ள பணக்கொடை மாநில அரசால் வழங்கப்படும் உயர்வாகும்.

26.9.2009 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில், இலங்கை அகதிகள் தமிழகத்திலே நிரந்தரமாக குடியிருக்க வழிவகை செய்து தர வேண்டும் என்று தமிழக அரசை கேட்டுக் கொண்ட தீர்மானத்தின்படி, மத்திய அரசுக்கு, தான் கடிதம் எழுதியதாக திரு.கருணாநிதி தெரிவித்துள்ளார். அதன் பிறகு மத்திய அரசிலே கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகள் அங்கம் வகித்த திரு.கருணாநிதி, இதற்காக என்ன நடவடிக்கை எடுத்தார் என்பதை அவர் தெரிவிப்பாரா? தி.மு.க.வால் நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானமும், அதைத் தொடர்ந்து மத்திய அரசுக்கு திரு.கருணாநிதி எழுதிய கடிதமும் ஒரு கபட நாடகம் தானே? தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தை திரு.கருணாநிதி எப்பொழுது மாற்றிக் கொண்டார்? இலங்கை அகதிகளை கட்டாயப்படுத்தி திருப்பி அனுப்பிவிட வேண்டும் என்ற முடிவை எப்போது எடுத்தார்? என்பதை திரு.கருணாநிதி தான் விளக்க வேண்டும்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் காரணமாக தமிழர்களுக்கு நன்மை ஏற்படும் என்ற நம்பிக்கை இருந்தாலும், அந்த நம்பிக்கை செயல் வடிவம் பெற வேண்டும். அதன் பின்னரே, இங்கேயுள்ள இலங்கை அகதிகள், தாயகம் திரும்புவது பற்றி எவரும் சிந்திக்க இயலும்.

"கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்றுஅதன்
குத்துஒக்க சீர்த்த இடத்து"

என்ற திருக்குறளை திரு.கருணாநிதிக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஓ.பன்னீர்செல்வம்
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**